# OVERCOMING FAILURE & ACHIEVING SUCCESS

தோல்வியை மேற்கொண்டு கிறிஸ்து இயேசுவின
மூலம் வெற்றி கொள்வது எப்படி? கீழ் வரும் ஜெபங்களை
தினசரி சொல்லுங்கள், தேவனுடைய மகிமையை காண்பீர்கள்.

1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, கலாத்தியர் 6-ஆம் அதிகாரத்தில் உம் வசனம் சொல்கிறது "ஒரு மனிதன் எதை விதைக்கின்றானோ அதைதான் அறுப்பான்" ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நான் முன்பு தவறானவைகளை விதைத்தற்காக உம் இறக்கத்தை பெற வேண்டுகிறேன். உம்முடைய வார்த்தையின்படி சரியானதை விதைக்க விரும்புகிறேன். இயேசுவே எனக்கு உதவி செய்யும். எங்கே நான் தவறாக விதைத்தேனோ அவைகள் புதிதாக்க படும்படி உம்முடைய இறக்கத்தை வேண்டுகிறேன். தோல்வியின் ஆவியை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டுகிறேன். என்னை விட்டு வெளியே போ திரும்பி வராதே என்று நான் உனக்கு கட்டளையிடுகிறேன்.

2. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, மத்தேயு 6-ஆம் அதிகாரத்தில் "நீங்கள் ஒன்றுக்கும் கவலைபடாதிருங்கள்." என்று சொன்னீர்கள். எல்லா கவலையின் ஆவியும் என்னை விட்டு வெளியே போ திரும்பி வராதே என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு நான் கட்டளையிடுகிறேன். இயேசுவே எனக்கு உம்மேல் நம்பிக்கையும், விசுவாசமும் இல்லை என்று சாத்தான் என்னை குற்ற படுத்துவான். சாத்தானவன் திருடவும், கொள்வும், அழிக்கவும் வருவான் ஆனால் நான் அவனுக்கு இடம் கொடுக்க மாட்டேன் நீர் சிலுவையில் பலியானதின் முலம் சாத்தானையும் மற்ற எல்ல வித பொல்லாத கிரியைகளையும் மேற்கொள்ள எனக்கு உம்முடைய நாமத்தில் வல்லமை தந்திருக்கின்றீர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் இருதயம், சிந்தை, ஆத்துமா, ஒன்றுக்கும் கவலைபடாமல் கிறிஸ்துவின் மேல் முழு விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் இருக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நீதீ, சமாதானம், சந்தோஷத்தை பெற்றுக் கொள்கிறேன்.

3. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, ரோமர் 12:11-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது "அசதியாயிராமல், ஜாக்கிரதையாய் இருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்." என் இருதயம், சிந்தை, ஆத்துமா, எல்லா நேரத்திலும் அசதியாயிராமல், ஜாக்கிரதையாயும், ஆவியிலே அனலுள்ளதாயும் கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

4. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, எபிரேயர் 6:11-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது "நீங்கள் சோம்பலாயிராமல் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து சோம்பேரிதனத்தின் ஆவியே என்னை விட்டு வெளியே போ திரும்பி வராதே என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உனக்கு நான் கட்டளையிடுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சுறு சுறுப்பின் ஆவியையும், கடின உழைப்பின் ஆவியையும், பெற்றுக் கொள்கிறேன்.

5. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, யாக்கோபு 3:16-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது "வைராக்கியமும், விரோதமும், எங்கே உண்டோ அங்கே கலகமும் சகல துர் செய்கைகளும் உண்டு." எல்லா சுயத்தை நாடுகிற ஆவி, தன்நல ஆவி, வைராக்கியத்தின் ஆவி, விரோதத்தின் ஆவி, பொறாமையின் ஆவிகள் யாவும் என்னை விட்டு வெளியே போ திரும்பி வராதே என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயம், சிந்தை, ஆத்துமாவை சுயநலமில்லாமல் தாரால குனத்தோடு எல்லோர் மேலும்

அன்பாயிருக்கவும், நான் கட்டளையிடுகிறேன். ஏனெனில் உண்மையான வெற்றிக்கு இது தான் வழி. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். நான் சந்திக்கும் வாடிக்கையாளரோ, பங்குதாரரோ, யாராய் இருந்தாலும் அவர்களை அக்கரையோடு, கவனிக்க என் இருதயம், சிந்தை, ஆத்துமாவுக்கு நான் கட்டளையிடுகிறேன்.

6. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, சங்கிதம் 37:25-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது "நீதிமான் கைவிடபட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை." இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், என் ஆண்டவர் என்னுடைய தேவைகள் எல்லாம் சந்திப்பார் என்று என் இருதயம், சிந்தை, ஆத்துமாவே அதை அறிந்து நினைவு கூறும்படி உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

7. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, பிரசங்கி 9:10-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய். போகிற பாதளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். கடின உழைப்புடன், நான் செய்ய வேண்டியவைகளை செய் என என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

8. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, மத்தேயு 6:33-ல் நீங்கள் கூறியது "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்போது இவைகளெல்லாம் கூட கொடுக்கபடும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, உனக்கு நான் கட்டளையிடுகிறேன் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் எல்லாவற்றிலும் தொடர்ந்து தேடு அப்படி செய்வதனால் என் தேவைகளெல்லாம் சந்திக்கப்படும்.

9. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,1தீமோத்தேயு 6:6-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, எல்லாவற்றிலும் மனநிறைவுடனும் தேவ பக்தியுடனும் இருக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன். ஆகையால் நான் மிகுந்த ஆதாயம் பெறுவேன்.

10. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, 1தெசலேனிக்கேயர் 5:18-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது, "எல்லாவற்றிலேயும் ஸ்தோதிரஞ் செய்யுங்கள் அப்படி செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது." இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, எல்லாவற்றிலும் எந்த சூழ்நிலையிலும் இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்த உனக்கு நான் கட்டளையிடுகிறேன். அப்படி நான் செய்வதே இயேசு கிறிஸ்துவுடைய சித்தமாயிருக்கிறது.

11. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ பிலிப்பியர் 4:13-ல் வார்த்தையின் படி "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்து இயேசுவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு." என்பதை அறிந்து அதை நினைவில் வைக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன்

12. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, லூாக்கா 10:27-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக." இதை செய்தால் நீ வாழ்வாய். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உம்முடைய வார்த்தையின் படி என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, என் அயலானை நீ முழுமையாக நேசிக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

13. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,மத்தேயு 5:44-ல் நீங்கள் எங்களுக்கு இட்ட கட்டளையானது உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினாலும், அவருடைய இரத்ததினாலும், என்னுடைய எல்லா எதிரிகளையும் நேசிக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன். அப்படி நான் செய்வதினால் நான் இயேசு கிறிஸ்துவின் நித்திய ஜீவனையும் வாக்கு தத்தத்தையும் பெற்றுக் கொள்வேன்.

14. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, யாக்கோபு 1:3-4-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது “உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்மென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ள வர்களாயிராமல் பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, பூரண பொறுமையுடன் வேளைகளை செய்ய உனக்கு நான் கட்டளையிடுகிறேன். அப்படி செய்தால் எனக்கு ஒரு நன்மையும் குறைவு படாது.

15. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, யாக்கோபு 1:19-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது “யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொருமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்க கடவர்கள்.” இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொருமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

16. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ எல்லோரையும் மன்னிக்கவும், கடினமானவர்களை தேவனிடத்தில் விட்டு விடவும், உனக்கு நான் கட்டளையிடுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமை அளிக்காத எந்த ஒரு வியாபாரத்திலும் வேளையிலும், நடவடிக்கையிலும் பங்கு எடுக்காமல் இருக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன். இப்படிபட்டவைகள் எனக்கு எந்த லாபத்தையும் கொடுக்காமல் தொல்லைகளையே கொண்டு வரும்.

17. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீதிமொழிகள் 22:4-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ தாழ்மையாயும் கர்த்தருக்கு பயந்தும் இருப்பாயாக என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன். அதனால் எனக்கு ஐசுவரியமும் மகிமையும் ஜீவனும் இருக்கும்.

18. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, 1யோவன் 2:15-ல் நீங்கள் சொன்னது உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும், அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும், அன்பு கூறாமல் சமாதான பிரபுவும் என் ஆத்ம மணவாளனாகிய கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

19. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழு ஆத்துமாவோடும், கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்போது அவர் உன் பாதைகளை செம்மைப்படுத்துவார் என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன். ஆகையால் என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ

உன்னுடைய எல்லா தீர்மானங்களிலும், நீ செய்வதெல்லாவற்றிலும் கர்த்தரை தேடுவாயாக என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ உன்னை ஞானியென்று எண்ணாமல், கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

20. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். பிலிப்பியர் 4:6-7 ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது ஒன்றுக்கும் கவலைபடாதிருங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ ஒன்றுக்கும் கவலைபடாமல் எல்லாவற்றையுங்குறித்து உன் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்திலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியபடுத்து அப்போது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உன் இருதயத்தையும் உன் சிந்தனையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும் என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

21. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ பிலிப்பியர் 4:19 ல் கூறுவது போல் “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்று அறிந்து அதை நினைவில் வை என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

22. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, 2கொரிந்தியர் 9:6-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது “பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.” இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ விசனமாயுமல்லாமல், கட்டாயமாயுமல்லாமல் எல்வற்றிலும் பெருக விதைக்க உனக்கு நான் கட்டளையிடுகிறேன். காரணம் உற்சாகமாய் கொடுகிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

23. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, நீ பூமியிலே உனக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள், பரலோகத்திலே உனக்கு பொக்கிஷங்களை சேர்த்து வை அங்கே பூச்சியாவது, துரவாவது கெடுக்கிறதும் இல்லை. இங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை, உன் பொக்கிஷம் எங்கேயோ அங்கேயே உன் இருதயமும் இருக்கும் என்று உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

24. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உபாகமம் 28:14-ல் உம்முடைய வார்த்தை சொல்கிறது “கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழகாமல் மேலாவாய்.” இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். நான் தலை. வால் அல்ல என்று அறிந்து அதை நினைவில் வைத்து நீதியில் நடக்க என் இருதயமே, சிந்தையே, ஆத்துமாவே, உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

.